18.07.2025

O.S.No.128/2018

பி.வா.சா.1.திரு.நயினான் வெள்ளைசாமி த.பெ.நயினான்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

நான் பிரதிவாதியின் அதிகார முகவர் என்ற நிலையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். பிரதிவாதி எங்கு இருக்கிறார் என்றால் வீட்டில் தான் இருக்கிறார். இந்த வழக்கு தாக்கல் செய்யும்போது பிரதிவாதி மீது தாக்கல் செய்யப்பட்டு அதன் பிறகு பிரதிவாதியின் முகவராக என்னை அனுமதிக்ககேட்டு மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதில் இருந்து முகவராக என்னை அனுமதிக்கும் வரை நான் எந்த ஊரில் குடியிருந்து வந்தேன் என்றால் சின்னகற்பூரம்ப்பட்டியில் குடியிருந்து வந்தேன். கம்பூர் கிராமம் பட்டா எண்.885, சர்வே எண்.755/11 சொத்தை பொறுத்து வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிழக்கே பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து காலியிடமாக உள்ளதா என்றால் இல்லை. ஓட்டு வீடாக இருந்தது. அது இடியும் நிலையில் இருந்ததால் ஆஸ்பட்டாஸ் வீடு கட்டப்பட்டுள்ளது.

2. தாவா சொத்தில் வீடு உள்ளது என்று சொல்வது சம்மந்தமாக என்ன ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பி.வா.சா.ஆ 2 உயில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ 2 ஆவணத்தில் சர்வே எண். 755/11 என்று எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் கதவு எண்.3/6–70, 360 சதுர அடி வீடு என குறிப்பிடப்பட்டுள்ளது. கதவு எண்.3/6–70, 360 சதுர அடி வீடு என குறிப்பிடப்பட்டுள்ளதர்க்கு

நான்குமால் எதுவும் காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வாதி வழக்கு தாக்கல் செய்த காலத்தில் நத்தம் மனை சர்வே எண்.755/11, பட்டா எண்.885 வாதி பெயருக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.

3. தாவா சொத்து 1 3/4 சொத்து இடம் என்றால் சரிதான். பட்டாவின்படி உள்ளது. உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள 360 சதுர அடி என்பது 1 செண்டை விட குறைவானது என்றால் சரிதான். நான் உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து வேறு தாவா சொத்து வேறு என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வீடு உள்ளது என்பதை நிருபிக்க நீதிமன்றம் மூலம் ஆணையரை நியமித்து நிருபிக்க நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

4. வாதி அவருடைய தாய்மாமன் P.A.அடைக்கண் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் P.A அடைக்கண் மற்றும் P.A. நயினான் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று சொல்லியுள்ளார். வாதியின் தாய்மாமனான P.A.அடைக்கண் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதேபோல் P.A. நயினான் என்பவரும் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். வாதியின் தாயார் பெயர் அடைக்கம்மாள் என்றால் சரியல்ல. நயினாம்மாள் ஆகும். வாதியின் தாயார் நயினாம்மாள் என்பதற்கு வாரிசுசான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் உயிலில் குறிப்பிட்டுள்ளார். வாதியின் தாயார் பெயர் அடைக்கம்மாள் என்றாலும், நான் சொல்வதுபோல் நயினாம்மாள் கிடையாது என்றாலும் சரியல்ல.

5. வா.சா.ஆ 2, வா.சா.ஆ 3 ஆவணங்களின்படி வாதியை இறந்துபோன P.A.நயினான் என்பவருக்கு வாரிசு என விளம்புகை செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை. வா.சா.ஆ 4, வா.சா.ஆ 5 ஆகிய

ஆவணங்களின்படி வாதியை இறந்துபோன P.A.அடைக்கண் என்பவருக்கு வாரிசு என விளம்புகை செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை. இறந்துபோன P.A.அடைக்கண் என்பவருக்கு வாரிசுசான்றிதழ் பெற்றுள்ளார் என்றால் தெரியவில்லை. வா.சா.ஆ 6 ஆவணத்தில் வாதி இறந்துபோன நபரின் சகோதரி மகன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தெரியவில்லை.

6. பி.வா.சா.ஆ 1 பொது அதிகார ஆவணமானது வழக்கிற்கு பின்னிட்டு நானும், எனது தந்தையும் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 3 ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 4 ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. அ.அழகன் என்பவர் இந்த வழக்கில் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 5, பி.வா.சா.ஆ 6 ஆவணங்கள் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு தாக்கல் செய்த வழக்கு என்றாலும் அந்த வழக்கில் இந்த வாதி தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்றாலும் வாதிக்கும் அந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை. வாதிக்கும் அந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொல்லும்பட்சத்தில் பி.வா.சா.ஆ 5, 6 ஆவணங்கள் எதற்காக இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் குறிப்பிட்ட சொத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு நிலுவையில் இருந்து கொண்டு வரும் விபரம் தெரிந்து கொண்டு வாதியை தரப்பினராக சேர்க்காமல் பி.வா.சா.ஆ 5, 6 ஆவணங்களின்படி தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே பி.வா.சா.ஆ 5, 6 ஆவணங்கள் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

7. பி.வா.சா.ஆ 8 ஆவணத்தில் உள்ள வீட்டு வரி ரசீதுகள் இந்த வழக்கிற்கு பிந்தைய ஆவணம் என்றால் சரிதான். தாவா சொத்தில் வீடு இருப்பதற்கான ரசீது தான் பி.வா.சா.ஆ 8 என்பது உண்மையல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள வீட்டில் தான் நாங்கள் குடியிருந்து வருகிறோம் என்று கிராம நிர்வாக அலுவலரிடம் சான்று பெற்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

8. நாங்கள் 20.05.2018 ஆம் தேதி தாவா சொத்தில் வாதியின் அனுபவதத்திற்கு இடையூறு செய்ததால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு மகன் என்ற முறையில் பவர் வாங்காமல் சாட்சியம் அளிக்க உரிமை உள்ளது என்றாலும், நான் O.S.No.84/2019 என்ற வழக்கை தாக்கல் செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் இந்த வழக்கை என்னையும் பவர் ஏஜென்ட் என்ற முறையில் மனு செய்து இந்த வழக்கை இழுத்தடித்து வந்துள்ளேன் என்றாலும் சரியல்ல. O.S.No.84/2019 வழக்கை உண்மையை மறைத்து தாக்கல் செய்து உத்தரவு பெற்றுள்ளதால் அது வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 2 உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள வீடானது தாவா சொத்து கிடையாது என்றாலும் அதன் விஸ்தீரணம் வேறு என்றாலும் நான் இந்த வழக்கை வீணாக எதிர்வாதம் செய்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் வீடு உள்ளது என்பதை நான் நீதிமன்ற மூலம் நிருபிக்க தவறிவிட்டதால் என் எதிர்வாதம் ஏற்று கொள்ளகூடியதல்ல என்றாலும், வாதிக்கு ஆதராவா தீர்ப்பு பிறப்பிக்கப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. நாளது தேதிவரை தாவா சொத்தானது காலியிடமாக வாதியின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ 2 உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள

வீட்டிற்கு நான்குமால் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றாலும் தாவா சொத்திற்கும் அந்த வீட்டிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்.P.மகாராஜன்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.